## - அறிவித்தல் -

## தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

### <u>தென் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019</u>

# Open/Limited Competitive Examination for Recruitment to the Posts of Management Assistants Class III in Southern Province-2019

** முக்கியமாக கவனத்திற் கொள்ளல் வேண்டும்**

இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போது தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளமான (www.psc.sp.gov.lk) ஊடாக கட்டாயமாக பதிவு செய்துகொண்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

1.0 இலக்கம் 192 மற்றும் 2014.09.11 ஆம் திகதியன்று தென் மாகாண ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட மற்றும் 2017.11.28 மற்றும் 2018.11.02 ஆகிய திகதிகளில் திருத்தம் செய்யப்பட்ட தென் மாகாண முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத - பல்துறை தொகுதி I சேவை வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தென் மாகாண அரச முகாமைத்துவ சேவை வகையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற தென் மாகாண விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. **2019.01.31 ஆம் திகதியன்று நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 150 ஆகும்.** விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி **2019.03.08** ஆவதுடன் இப்பரீட்சை 2019 யூன் மாதத்தில் நடைபெறும்.

2.0 தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தேர்ச்சி ஒழுங்கின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற திறந்த விண்ணப்பதாரர்கள் மாவட்டத்தின் குடித்தொகை விகிதாசாரத்திற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70% வீதம் திறந்த போட்டிப் பரீட்சையினாலும் 30% வீதம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையினாலும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள 30% வீதம் இல்லாத பட்சத்தில் அந்த வெற்றிடங்களும் திறந்த விண்ணப்பதாரர்கள் மூலம் நிரப்பப்படும்.ஆட்சேர்ப்பு செய்யப்படும் தொகையை தீர்மானிக்கும் அதிகாரத்தை தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு கொண்டிருக்கும்.

3.0 **சம்பள அளவுத்திட்டம்:-** இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், தென் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்குரிய சம்பள அளவுத் திட்டம் MN 2-2006 ஆகக் காணப்படுவதுடன், மாதாந்த சம்பள அளவுத் திட்டம் 28,940 – 10x300 - 11x350 - 10x560- 10x660 - 47,990 ஆகும். அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரையில் ரூ. 25,950 அடிப்படைச் சம்பளமும் ரூ.889 சீராக்கல் கொடுப்பனவும் உரித்தாகும்.

4.0 இப்பதவி நிரந்தரமானதாகும். இப்பதவிக்குரிய ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

5.0 **தகைமைகள்:-** தென் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளை விண்ணப்பம் கோரும் இறுதி தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. அனைத்து விண்ணப்பதாரர்களும் தென் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குமுரிய சிறந்த உடல் மற்றும் உளசார் ஆரோக்கியமும் நல்லொழுக்கமும் உடையராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று "விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் அண்மித்த 05 வருட காலத்தில் தொடர்ச்சியான 03 வருட காலம் நிரந்தர வதிவு அல்லது அண்மித்த 05 வருட காலத்தில் தொடர்ச்சியான 03 வருட காலம் வாழ்க்கைத் துணையின் வதிவுடன் விண்ணப்பதாரர் ஒரு வருட காலம் நிரந்தர வதிவு" உறுதிப்படுத்துதல் வேண்டும். வதிவை உறுதிப்படுத்துவதற்கு நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களை சமர்பித்தல் வேண்டும்.

(அ) தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேருநர் இடாப்பின் பிரதி மற்றும்
(ஆ) பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ்

IV. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் **அனைத்துத் தகைமைகள்** பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

<u>திறந்த விண்ணப்பதாரர்கள்</u>

- கல்வித் தகைமைகள் **:**
  - சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

    மற்றும்
  - க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது சாதாரணப் பரீட்சை தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத் திட்டத்தின் கீழாயின் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.
- **வயதெல்லை :-**
  விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

<u>மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள்</u>

- கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு பின்வரும் பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் / எண் கணிதம் / தூய கணிதம் / அடிப்படை கணிதம் / வர்த்தக எண் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அனுபவம் : உரிய தினத்தன்று தென் மாகாண அரச சேவையின் நிரந்தர நியமனம் ஒன்றிலே 05 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் அது பற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். (யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள அல்லது யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சிக் காலப் பகுதியொன்று மேற்குறிப்பிட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலப் பகுதியில் கணிப்பிடப்பட மாட்டாது. யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக / அமய சேவைக் காலப் பகுதி மேற்படி தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலப் பகுதியினுள் கணிப்பிடப்பட மாட்டாது.)

பிற விடயங்கள் : தென் மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கின்ற அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் பிரகாரம் ஆரம்ப மட்டம் **PL** தொகுதியைச் சேர்ந்த சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற அலுவலர்கள் மற்றும் **MN**-01 2006 **A** சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

## 6.0 பரீட்சை நடைமுறைகள் :-

இப்பரீட்சை இரண்டு வினாத் தாள்களைக் கொண்டது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இப்பரீட்சை நடைபெறும். மேலும் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பரீட்சை | பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட | உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் |
| திறந்த | மொழித் தேர்ச்சி | 100 | 2½ மணித்தியாலம் |
| மட்டுப்படுத்தப்பட்ட | மொழித் தேர்ச்சி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தகைமை பரீட்சை | 100 | 2½ மணித்தியாலம் |

மேற்படி பாடங்களுடன் தொடர்புடைய பாடத்திட்டங்கள் பின்வருமாறு.

**உளச்சார்பு** - இந்த வினாத்தாள் விண்ணப்பதாரர்களின் எண்கணித ஆற்றல், தர்க்க திறன் மற்றும் பொது அறிவைப் பரிசீலிக்கும் வகையிலான உள்ளுணர்வு சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

- **மொழித் திறன்** - இந்த வினாத்தாள் விண்ணப்பதாரிகளின் கருத்து வெளிப்பாடு, புரிந்து கொள்ளல், எழுத்து வழுக்கள், மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்ட கடிதம் ஒன்றினை தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம் விளக்கப்பட அட்டவணை தயாரித்தல், தரப்பட்டுள்ள உரைப்பந்தியின் சாராம்சத்தை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்றொடரின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணப் பயன்பாடு என்பன தொடர்பான அறிவினை பரீட்சிக்கின்ற உள்ளுணர்வு சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

- **மொழித் தேர்ச்சி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தகுதி பரிசோதனை** - இந்த வினாத்தாள் விண்ணப்பதாரிகளின் கருத்து வெளிப்பாடு, புரிந்து கொள்ளல், எழுத்து வழுக்கள், மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்ட கடிதம் ஒன்றினை தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம் விளக்கப்பட அட்டவணை தயாரித்தல், தரப்பட்டுள்ள உரைப்பந்தியின் சாராம்சத்தை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்றொடரின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணப் பயன்பாடு என்பன தொடர்பான அறிவினை பரீட்சிக்கின்ற உள்ளுணர்வு சார்ந்த வினாக்களையும், அலுவலக ஆவணங்கள் தொடர்பில் செயற்படுகின்ற விதம் பற்றிய அடிப்படை

சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் பணியாற்ற வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய கடிதமொன்று தொடர்பாக செயற்பட வேண்டிய விதம் போன்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் கடமைகள் பற்றி விண்ணப்பதாரர்களிடம் காணப்படுகின்ற அறிவினை பரீட்சிக்கும் வினாத்தாள்களையும், அலுவலகம் ஒன்றிலே பயன்படுத்துகின்ற அழைப்பு நாட்குறிப்பு, வவுச்சர், அசைவுப் பத்திரம், வரவு இடாப்பு, தின முத்திரை, முத்திரை மற்றும் பெயர் முத்திரை, தபால் பொதி போன்றன தொடர்பாகவும், அவற்றின் பயன்பாடுகள் தொடர்பாகவும் பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரீட்சிக்கின்ற வினாக்களையும் இவ்வினாத்தாள் கொண்டிருக்கும்.

விண்ணப்பதாரர்களின் கடமைப் பணிகளுக்கான தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினை பரீட்சிக்கும் பொருட்டு இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.)

நியமனத்திற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளையேனும் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு எழுத்துமூல பரீட்சை தொடர்பாகவும், தெளிவற்ற கை எழுத்துக்கள் மற்றும் சொற்களில் காணப்படுகின்ற எழுத்துப் பிழைகள் தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்படும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 50% வீத புள்ளிகளையேனும் பெற்றிருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் ப‘ர்த்தி செய்யும் வகையில் பெற்றுள்ள புள்ளிகளின் ஒழுங்கு முறையினை முழுமையாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வெளியிடப்படும்.

**7.0** **பரீட்சைக் கட்டணம் :-** பரீட்சைக் கட்டணம் ரூபா 400/= ஆகும். இத்தொகையினை தென் மாகாண பிரதமச் செயலாளரின் வருமானத் தலைப்பு **2003-02-13** இல் வரவு வைக்கப்படும் விதத்தில் தென் மாகாணத்தில் அமைந்துள்ள எதாவதொரு பிரதேசச் செயலகத்திற்கு செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்படிவத்தின் உரிய பெட்டியில் நன்கு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியொன்றை எதிர்கால தேவைகளுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரை அல்லது காசுக் கட்டளை என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தபால் அல்லது உப தபால் அலுவலகங்களுக்குச் செலுத்தப்படுகின்ற பணமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**8.0** **பரீட்சை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்கள் :-**

பின்வரும் நகரங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏதேனுமொரு நகரத்திற்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து குறித்த பரீட்சை அருகாமையிலுள்ள நகரத்தில் நடாத்தப்படும். விண்ணளப்பதாரர்கள் நிரந்தரமான வதிவைக் கொண்டுள்ள மாவட்டங்களிலுள்ள பின்வரும் நகரங்களில் ஒன்றை தமது நகரமாக குறிப்பிடுதல் வேண்டும்.

| | காலி மாவட்டம் | மாத்தறை மாவட்டம் | ஹம்பாந்தோட்டை மாவட்டம் |
|---|---|---|---|
| நகரம் | காலி | மாத்தறை | தங்காலை |
| | அம்பலங்கொடை | அக்குரெஸ்ஸ | ஹம்பாந்தோட்டை |
| | பத்தேகம | | |

9.0 **விண்ணப்பங்கள்**

தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான (www.psc.sp.gov.lk) ஊடாக கட்டாயமாக பரீட்சைக்கு பதிவு செய்துகொள்ளல் வேண்டும். A4 (செ.மீ. 21x29) (சாதாரண ஹாப்சீட்) அளவிலான தாளினைப் பயன்படுத்தி விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி (Hard Copy) ஒன்றினை 2019 மார்ச் மாதம் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அந்த அச்சுப் பிரதியை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “தென் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2019” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்,
தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
6 ஆம் மாடி, மாவட்டச் செயலகக் கட்டிடத் தொகுதி,
காலி.

9.1 இணையத்தளத்தின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது சகல விண்ணப்பதாரர்களிடமும் செல்லுபடியான தேசிய அடையாள அட்டையொன்று, உங்களது அல்லது உங்களுக்கு தகவல் அறிவிக்கக் கூடிய நெருங்கிய உறவினர் ஒருவரது இயங்குகின்ற கைபேசி இலக்கமொன்று மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு என்பன இருத்தல் அவசியமாகும். பரீட்சை பற்றிய அனைத்துத் தகவல்களும் நீங்கள் வழங்குகின்ற கைபேசி இலக்கத்திற்கே பெற்றுத் தரப்படும். பரீட்சைக்கு பதிவு செய்துகொண்டதன் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற உரிய விண்ணப்பப் படிவத்திற்கு இசைவுறாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தாத மற்றும் உரியவாறு நிரப்பாத பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யாமையால் ஏற்படுகின்ற நஷ்டத்தை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றினைக் கட்டாயமாக தம்மிடம் வைத்துக்கொள்ளல் வேண்டும். பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளும் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.psc.sp.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு விளங்கி அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டியமை உங்களது பொறுப்பாகும்.

9.2 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் மீது உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் விண்ணப்பதாரர் ஒருவர் இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளதாகக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முக பரீட்சை ஒன்றிற்கு அழைத்து அறிவித்தலின் பிரகாரம் தகைமை உள்ளனவா என பரீட்சிக்கும் போது உரிய தகைமைகள் இல்லையென கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நபர்களின் பரீட்சைக்கான விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

9.3 விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான் ஒருவர், சத்திய ஆணையாளர் ஒருவர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகார உத்தரவாதம் பெற்ற அதிகாரி ஒருவர், பொலிஸ் சேவையின் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கின்ற அலுவலர் ஒருவர், வருடாந்தச் சம்பளம் ரூ.240,360/- அல்லது அதிலும் கூடிய அரசாங்க பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

10.0 விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளதாகக் கருதக் கூடாது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்களினால் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் அவர்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் வேண்டும். மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் தோற்றுகின்ற ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்காகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையக் கூடியவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கான பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i.) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii.) செல்லுபடியான கடவுச் சீட்டு
(iii.) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.sp.gov.lk ஊடாக வெளியிட்டதன் பின்னர் அது பற்றி நீங்கள் பெற்றுத்தந்த கைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் (SMS) மூலம் அறிவிக்கப்படுவதுடன், நீங்கள் அந்த அனுமதிப் பத்திரத்தின் அச்சுப் பிரதி (Hard Copy) ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பரீட்சை நடைபெறும் திகதியிலிருந்து 07 நாட்களுக்கு முன்னர் பரீட்சை அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது போன விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகவல்கள் சகிதம தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு தொலைபேசி இலக்கங்கள் **091-2234309 / 0912248450** ஊடாக அது பற்றி அறிவிக்க முடியும்.

I. பரீட்சையின் பெயர்
II. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்
III. விண்ணப்பப்படிவத்தை தபாலிட்ட அலுவலகம், பதிவிலக்கம் மற்றும் திகதி
IV. பரீட்சைக்கு பதிவு செய்துகொண்ட திகதி

11.0 **ஆட்சேர்ப்பு நடைமுறை**

இப்பதவிக்கு மேற்படி பரீட்சைகளில் காட்டியுள்ள தேர்ச்சி மற்றும் பொ.நி.சு.15/90 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் மாவட்டச் சனத்தொகை விகிதாசரம் என்பவற்றிற்கேற்ப தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். (நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக நியமனங்கள் வழங்கப்பட வேண்டிய இறுதி முன்னுரிமை மட்டத்தில் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சையினை நடாத்தி கல்வித் தகைமைகளின் அடிப்படையில் அதிகூடிய தகைமைகளைக் கொண்டுள்ள நபர்கள் ஒழுங்குமுறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்.) யாதேனுமொரு மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக போட்டியிடுவதற்கு அம்மாவட்டத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை உடையவர்களாகக் கருதப்படுவர்.

11.1 பொ.நி.சு.15/90 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% வீதம் அங்கவீனமுற்றோருக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறும் அங்கவீனமுற்றோரில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 3% வீதமானோர் மாத்திரம் நியமனங்கள் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களின் புள்ளிகள் மட்டமானது ஆகக் குறைந்தது 50% வீதமாகவேனும் இருத்தல் வேண்டும். நியமனம் ஒன்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மருத்து நிபுணர்கள் குழுவொன்றிடம் முன்னிலைப்படுத்தப்படுவதுடன், மருத்து நிபுணர் ஒருவரின் மருத்துவச் சான்றிதழ் ஒன்றின் மூலம் தமது அங்கவீன நிலை மற்றும் அது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தடையாக அமையாது என்பதையும் உறுதி செய்தல் வேண்டும். அதன் பிரகாரம், உங்களது அங்கவீன நிலையை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

11.2 தகைமைகள் பரீட்சிக்கப்படாது சகல விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வாய்ப்பளிக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அறிவித்தலின் பிரகாரம் தகைமைகளைப் பெற்றிராத விண்ணப்பதாரர்கள் நியமனம் ஒன்றினைப் பெறுவதற்கு தகைமை பெற மாட்டார்கள்.

12.0 **போலியான தகவல்களை வழங்குதல்**

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பு உண்டு. சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட, விண்ணப்பதாரர் ஒருவரினால் வழங்கப்பட்ட யாதேனுமொரு தகவலை போலியானதென தெரிந்துகொண்டே வழங்கியிருப்பதாக தெரியவரும் பட்சத்தில் அவர் சேவையில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது.

13.0 பரீட்சை நடாத்துவது தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். இந்த ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவரினால் உட்பட வேண்டி நேரிடும்.

14.0 இங்கு குறிப்பிடப்படாத யாதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சைகள் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

யூஜீ. விதுர காரியவசம்,
செயலாளர்,
தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

2019 பெப்ரவரி மாதம் 01ஆந் திகதி,
தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
06 ஆம் மாடி,
மாவட்டச் செயலகக் கட்டிடம்,
காலி.

(இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களினால் போலியான முறையில் தயாரித்து வெளியிடப்படுகின்ற விளம்பரங்களில் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் பற்றி எதுவித பொறுப்பும் கூறப்பட மாட்டாது).